# மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆரம்ப தர அரைகுறை தொழிற்கலை சேவைப் பிரிவின் ஆயுர்வேத ஔடதக் கூட்டிணைப்பாளர் (மருந்து தயாரிப்பாளர்) பதவித் தரம் III இற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - திறந்த முறை

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆரம்ப தர அரைகுறை தொழிற்கலை சேவைப் பிரிவின் ஆயுர்வேத ஔடதக் கூட்டிணைப்பாளர் பதவித் தரம் III இல் காணப்படும் 03 வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகுதியுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி 2026.10.02 ஆகும்.

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2018.03.30 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆரம்ப தர அரைகுறை தொழிற்கலை PL - 2 சேவைப் பிரிவின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டத்தின் 7.2 ஆம் பிரிவின் விதந்துகாப்புகளுக்கு அமைவாக 2026.01.27 ஆம் திகதியன்று பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

03. **இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரிமையுடையது**.
**பதவிக்குரிய சம்பளத் திட்டம்**: **ரூ**. 41800 – 10 X 490 -10 X 540 -10 X 590 – 12 X 630 – 65560

(i) கல்வித் தகுதிகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் தகைமையின் (NVQ) 3 ஆம் மட்டத்திற்குரிய தொழில்சார் பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

**(ii) தொழில்சார் தகுதிகள் :**

| பதவி | தகுதிகள் |
|---|---|
| ஆயுர்வேத ஔடதக் கூட்டிணைப்பாளர் | பதவிக்கு அமைவாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் தகைமையின் (N.V.Q) 2 ஆம் அல்லது 3 ஆம் மட்டத்திற்கு |

| | |
|---|---|
| | குறையாத மட்டத்திலான உரிய தொழில்சார் பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல். |

(iii) அனுபவம் : i. உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம் ஒரு சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

ii. ஆயுர்வேத ஔடதக் கூட்டிணைப்பாளர் பதவிக்கு மட்டும் உரிய துறையில் இரண்டு (02) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(iv) உடற்தகுதி : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனவியல்தகுதியைக்கொண்டிருத்தல்வேண்டும்.

(v) ஏனையவை : i. இலங்கைப்பிரஜையாகஇருத்தல்வேண்டும்.

ii. விண்ணப்பதாரிகள் நற்பண்பு உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. பதவிக்குஆட்சேர்ப்புசெய்வதற்கானவிண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்துத் தகுதிகளும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதிக்கு மத்திய மாகாணத்தில்இறுதியாகதொடர்ச்சியாகமூன்று(03) வருடங்கள்நிரந்தரவசிப்பிடத்தைஉறுதிப்படுத்தல் வேண்டும்.

(vi) வயது :

குறைந்தபட்ச எல்லை : 18 வயதிற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

உயர் எல்லை : 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. ஆட்சேர்க்கும் முறை :

(i). பாடவிதானஅறிவுதொடர்பில்தீர்மானிப்பதற்கான தொழில்சார் பரீட்சை மற்றும் தகுதிகள், அனுபவங்களை பரிசீலிக்கும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை என்பவற்றில் பெறப்படும் புள்ளிகளின் திறமை வரிசைப்படி நிலவும்

வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**(ii). பாடவிதான அறிவு**

| பாடங்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| தேசீயஔடதங்களைக்கூட்டிணைக்கும் (மருந்து தயாரிக்கும்) ஆற்றல் | 20 | பொருந்தாது. |
| தேசீயஔடதங்களைப்பொதியிடுதல்மற்றும் பாதுகாத்தல் | 20 | |
| தேசீயஔடதங்களைவிநியோகிப்பதுதொடர்பான அறிவு | 10 | |

**(iii). கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை**

| பரிசீலிக்கப்பட்டுபுள்ளிகள்வழங்கப்படும்துறைகள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிககல்வித்தகுதிகள் | 15 | பொருந்தாது. |
| உரியதுறையிலானஅனுபவம் | 30 | |
| நேர்முகப்பரீட்சையில்வெளிப்படுத்தும்திறமை | 05 | |

(iv). விண்ணப்பங்கள் கோரும் முறை - விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026.10.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், த.பெ. எண் 121, மத்திய மாகாண சுகாதார அமைச்சு, சங்கராஜ மாவத்தை, கண்டி எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில் "மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆரம்ப தர அரைகுறை தொழிற்கலை சேவைப் பிரிவின் ஆயுர்வேத ஔடதக் கூட்டிணைப்பாளர் பதவித்

தரம் III இற்காகத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - திறந்த முறை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

திகதி 2026.09.11

ஜெகத்அதிகாரி

செயலாளர்

சுகாதார, சுதேசியவைத்தி, சமூகநலன்புரி,

நன்னடத்தைமற்றும்சிறுவர்பராமரிப்புச்சேவைகள்அமைச்சு

மத்தியமாகாணம்

Gazette.lk